# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - முந்நீர்ஞாலம்
## ஆழ்வார் அழகரைத் தம் இந்திரியங்களின் குறையால் பூர்ணாநுபவம் பண்ண முடியாமல் வருந்த, எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்

** முந்நீர் ஞாலம் படைத்த * எம் முகில் வண்ணனே! *
அந்நாள் நீ தந்த * ஆக்கையின் வழி உழல்வேன் **
வெந்நாள் நோய் வீய * வினைகளை வேர் அறப் பாய்ந்து *
எந்நாள் யான் உன்னை * இனி வந்து கூடுவனே? 1

வன் மா வையம் அளந்த * எம் வாமனா! * நின்
பன்மா மாயப் பல் பிறவியில் * படிகின்ற யான் **
தொன்மா வல்வினைத் * தொடர்களை முதல் அரிந்து *
நின் மா தாள் சேர்ந்து * நிற்பது எஞ்ஞான்று கொலோ? 2

கொல்லா மாக் கோல் * கொலை செய்து பாரதப் போர் *
எல்லாச் சேனையும் * இரு நிலத்து அவித்த எந்தாய்! **
பொல்லா ஆக்கையின் * புணர்வினை அறுக்கல் அறா *
சொல்லாய் யான் உன்னைச் * சார்வதோர் சூழ்ச்சியே 3

சூழ்ச்சி ஞானச் * சுடர் ஒளி ஆகி * என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி * என்ங்ஙனும் நிறைந்த எந்தாய்! **
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து * நின் தாளிணைக் கீழ்
வாழ்ச்சி * யான் சேரும் * வகை அருளாய் வந்தே 4

வந்தாய் போலே * வந்தும் என் மனத்தினை நீ *
சிந்தாமல் செய்யாய் * இதுவே இது ஆகில் **
கொந்தார் காயாவின் * கொழு மலர்த் திரு நிறத்த
எந்தாய்! * யான் உன்னை * எங்கு வந்து அணுகிற்பனே? 5

கிற்பன் கில்லேன் என்றிலன் * முன நாளால் *
அற்ப சாரங்கள் அவை * சுவைத்து அகன்று ஒழிந்தேன் **
பற்பல்லாயிரம் * உயிர் செய்த பரமா! * நின்
நற்பொன் சோதித் தாள் * நணுகுவது எஞ்ஞான்றே? 6

எஞ்ஞான்று நாம் இருந்து இருந்து * இரங்கி நெஞ்சே! *
மெய் ஞானம் இன்றி * வினை இயல் பிறப்பு அழுந்தி **
எஞ்ஞான்றும் எங்கும் * ஒழிவற நிறைந்து நின்ற *
மெய் ஞானச் சோதிக் * கண்ணனை மேவுதுமே 7

மேவு துன்ப வினைகளை * விடுத்தும் இலேன் *
ஓவுதல் இன்றி * உன் கழல் வணங்கிற்றிலேன் **
பாவு தொல் சீர்க் கண்ணா! * என் பரஞ்சுடரே! *
கூவுகின்றேன் காண்பான் * எங்கு எய்தக் கூவுவனே? 8

கூவிக் கூவிக் * கொடு வினைத் தூற்றுள் நின்று *
பாவியேன் பல காலம் * வழி திகைத்து அலமருகின்றேன் **
மேவி அன்று ஆநிரை காத்தவன் * உலகம் எல்லாம் *
தாவிய அம்மானை * எங்கு இனித் தலைப்பெய்வனே? 9

தலைப்பெய் காலம் * நமன் தமர் பாசம் விட்டால் *
அலைப்பூண் உண்ணும் * அவ்வல்லல் எல்லாம் அகல **
கலைப் பல் ஞானத்து * என் கண்ணனைக் கண்டு கொண்டு *
நிலைப் பெற்று என் நெஞ்சம் * பெற்றது நீடுயிரே 10

** உயிர்கள் எல்லா * உலகமும் உடையவனை *
குயில் கொள் சோலைத் * தென்குருகூர்ச் சடகோபன் **
செயிரில் சொல் இசை மாலை * ஆயிரத்துள் இப்பத்தும் *
உயிரின் மேல் ஆக்கை * ஊனிடை ஒழிவிக்குமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---